இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 இதழ் : 09 திகதி : 28.05.2023 விலை : 50.00

## கிறிஸ்துவின் திருஉடல், திருஇரத்தம் இறைவனின் உன்னதமான கொடை - திருத்தந்தை

நற்கருணையின் மறைபொருள் திருவழிபாட்டு முறை மற்றும் முழுக் கிறிஸ்தவ வாழ்க்கையின் மையமாகும் என்றும், தூயஆவியானவரால் தொடர்ந்து வழிநடத்தப்படும் திருஅவை வாழ்வு மற்றும் நமது வாழ்வில் இறைவனின் அருள்பிரசன்னத்தைப் புரிந்து கொள்வதில் நற்கருணை நமக்கு உதவுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நற்கருணையின் வழியாகக் கடவுளின் மறைக்கல்வியை வழங்குவதற்கும், வழிபாட்டு முறையின் அழகைக் கவனித்துக்கொள்வதற்கும், அதை முறையாகக் கொண்டாடுவதற்கும், கத்தோலிக்க நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும், நமது ஆற்றலின் ஆதாரமாகக் கடவுள் இருக்கிறார் என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்தவர்கள், தங்களது மேய்ப்புப் பணியாளர்களுடன் இணைந்து, மிகவும் புனிதமான திருநற்கருணை மற்றும் கிறிஸ்தவ ஒற்றுமையின் பிணைப்பை நற்கருணை வழியாகச் சிறப்பிக்கட்டும் என்று கூறிய திருத்தந்தை அருட்பணியாளர்கள் அனைவரும் மக்களுடன் இணைந்து, கிறிஸ்துவின் திருஉடல் மற்றும் திருஇரத்தத்தின் உன்னதமான கொடையான தியாகத்திற்காக தமதிரித்துவத்திற்குப் பக்தியுடன் நன்றி செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நிலைவாழ்வின் அழியாமையுடன் இந்த பூமிக்குரிய வாழ்க்கையில் மனிதர்களாகக் கடவுளால் நாம் வளர்க்கப்படுகின்றோம் என்றும், கிறிஸ்தவர்களின் நம்பிக்கை, பணி ஆகியவற்றை நற்கருணையால் பலப்படுத்தவும் அதிகரிக்கவும் முயற்சிக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

## கனடா பற்றிமா அன்னை ஆலய திருவிழாவில் யாழ்.ஆயர்



கனடா புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீக பணியகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவும் ஆலயத் திருவிழாவும் யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் கூட்டுத் திருப்பலியுடன் கடந்தவாரம் கனடாவில் கொண்டாடப்பட்டது .

திருப்பலியின் நிறைவில் ஆயரின் அகவையின் பவள விழா கனடா வாழ் தமிழ்க் கத்தோலிக்க மக்களால் மகிழ்வுடன் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுகளை பற்றிமா அன்னை ஆலயப்பரிபாலகர் அருட்பணி கனீசியஸ் அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார்.

## திரு அவையின் வளர்ச்சிக்காகப் பல புதிய மாற்றங்களை எதிர்கொள்ள ஆயத்தமாகுங்கள்

**செம்பியம்பற்று புனித பிலிப்பு நேரியார் திருநாள் மறையுரையில் யாழ் மறை மாவட்டக் குரு முதல்வர்**



இவ்வருடம் அக்டோபர் மாதம் முதல் உரோமையில் நடைபெற இருக்கின்ற கூட்டொருங்கியக்கத் திரு அவையாகப் பயணிப்போம் என்ற தலைப்பிலான உலக ஆயர் மன்றத்தில் திரு அவையின் வளர்ச்சிக்காகப் பல புரட்சிகரமான முடிவுகள் எடுக்கப்பட இருக்கின்றன என்று எதிர்பார்க்கப்படுகிற இவ்வேளையில் இவற்றை நல்ல மனதோடு ஏற்றுக்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும் ஆயத்தமாக வேண்டும் என்று குரு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

உங்கள் கூடாரங்களை அகலப்படுத்துங்கள் என்ற கருப்பொருளில் நடைபெற இருக்கின்ற இம்மாநாட்டில் அனைவரையும் திருஅவைக்குள் சமத்துவமாக உள்வாங்குவதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட இருக்கின்றது. இதனால் திரு அவையின் நலனுக்காக நாம் எமது பல பாரம்பரியங்களைக் கைவிட வேண்டி ஏற்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

அனைத்து மக்களையும் சமத்துவமாகத் திரு அவைக்குள் உள்வாங்கும் பணியையே புனித பிலிப்பு நேரியாரும் ஆற்றினார் என்பதை அவருடைய வாழ்க்கையில் இருந்து பல உதாரணங்கள் வழியாகக் குரு முதல்வர் தெளிவுபடுத்தினார்.

இவ்வருடம் நடைபெற இருக்கின்ற உலக ஆயர் மன்றத்தில் ஆயர்களோடு சமத்துவமாக ஆண் பெண் பொதுநிலையினர் பங்குபெறுவது இம்மன்றத்தின் தன்மையையும் நோக்கத்தையும் தெளிவாக வெளிப்படுத்துவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

## வடக்குமாகாண புதிய ஆளுநர் குருமுதல்வரிடம் ஆசீர்



புதிதாக நியமனம் பெற்று பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம். சாள்ஸ் அவர்கள் கடந்த 22 ஆம் திகதி யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளுடனான சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

யாழ்.மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் குருமுதல்வர் அவர்களின் ஆசீரை ஆளுநர் அவர்கள் பெற்றுக் கொண்டதுடன் தற்கால நிலமைகள் பற்றியும் கலந்துரையாடினார்.

## அன்பிய எழுச்சிநாள்

யாழ். மறைமாவட்டத்தில் மறைமாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்படும் அன்பிய எழுச்சி நாள் வருகின்ற யூன் மாதம் 4ஆம் திகதி மூவொரு கடவுள் திருநாளன்று கடைப்பிடிக்க படவுள்ளதாக மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை யூட் ஜோசப் ஜோய் மரியரட்ணம் அடிகள் தெரிவித்துள்ளார். இவ் எழுச்சி நாளுக்கு ஆயத்தமாக அன்பிய வாரம் கடைப்பிடிக்கபடவுள்ளதாகவும் இவ் அன்பிய வாரம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 4ஆம் திகதி நிறைவடையுமெனவும் இவ் வாரத்தில் அன்பிய ஊக்குவிப்பாளர்கள் பங்குத்தந்தையர்களுடன் இணைந்து பங்கு ரீதியாக அன்பிய சிறப்பு நிகழ்வுகளை முன்னெடுக்கும்படியும் கேட்டுள்ளார்.

## கதம்ப வதிவிடப்பயிற்சி

கிளரேசியன் சபையினரால் முன்னெடுக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான மாணவ கதம்ப வதிவிடப் பயிற்சி கடந்த 19ஆம் திகதி ஆரம்பமாகி சனி, ஞாயிறு தினங்களில் பருத்தித்துறைப் பங்கில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை பெனட் அடிகளின் ஏற்பாட்டில் கிளாறட் மாணவர் கதம்ப செயற்பாட்டு இயக்குநர் அருட்தந்தை அருள்ராஜ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறுவர்களுக்கான கருத்துரைகள், விளையாட்டுக்கள், குழு செயற்பாடுகள் என்பன இடம்பெற்றதோடு 42 வரையான மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து பயனடைந்தார்கள்.

## கட்சி மோதல்களும் மதங்களுக்கு இடையிலான பிரிவினை முயற்சிகளும் முள்ளி வாய்க்கால் தியாகங்களைக் கொச்சைப்படுத்த நாம் அனுமதிக்கக் கூடாது யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர்

கட்சி மோதல்களும் மதங்களுக்கு இடையிலான பிரிவினை முயற்சிகளும் முள்ளி வாய்க்கால் தியாகங்களைக் கொச்சைப்படுத்த நாம் அனுமதிக்கக் கூடாது என யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகள் முள்ளிவாய்க்கால் புனித சின்னப்பர் ஆலயத்தில் நடைபெற்ற நினைவேந்தல் திருப்பலி மறையுரையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால்வரை நடைபெற்ற யுத்தத்தில் இறந்து போன ஆயிரக்கணக்கான மக்களின் ஆன்ம இளைப்பாற்றிக் காகச் செபிக்கின்ற அதேவேளையில் இவர்களுடைய தியாகங்கள் வீண் போகாமல் இருக்க நாம் அனைவரும் ஒற்றுமையோடு உழைக்க வேண்டுமெனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்எப்போதும் இல்லாதவாறு தற்போது அரசியல் கட்சிகள் இடையே போட்டிகளும் வேற்றுமைகளும் அதே வேளையில் மதங்களுக்கு இடையே பிரிவினைகளை ஏற்படுத்தும் சக்திகளும் தலைவிரித்து ஆடுகின்றபடியினால் இத்தியாகங்கள் கொச்சைப்படுத்தப்பட்டு பலன் கொடுக்காமல் போகும் ஆபத்து உள்ளதெனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## பொருளாதார நெருக்கடி! வகுக்கப்படும் வியூகம்!

வடக்குக் கிழக்கில் இந்தியத் திட்டங்களுக்கு முன்னுரிமை என்ற வியூகத்துடன் இந்தியாவுடனான வர்த்தக உறவை விரிவுபடுத்தும் ஏற்பாடுகள் வகுக்கப்படுகின்றன. ஜப்பான் பயணத்தை அடுத்து ரணிலின் புதுடில்லிப் பயணம் இதற்குப் பதில் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கேற்ப மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, முன்னாள் பிரதி ஆணையாளர் டபிள்யு.ஏ.விஜயரட்ண, உள்ளிட்ட பொருளியல் நிபுணர்களிடம் ஆலோசனைகள் பெறப்படுகின்றன. ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் ஜனாதிபதி ரணில் இந்தியா வைக் கடந்து அமெரிக்க - சீன அரசுகளுடன் நேரடியாகக் கையாள முற்படும் நகர்வுகளில் புது டில்லிக்கு அதிருப்தி உண்டு.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் முதுகெலும்பான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் இலங்கை வெளிப்படுத்தும் மறு தாக்கங்களும் இந்தியாவுக்கு ஒத்துவரக்கூடியதல்ல.

இதன் பின்னணியிலேயே இந்தியாவும் இலங்கையுடன் சில உத்திகளைக் கையாள ஆரம்பித்திருக்கிறது. குறிப்பாக இலங்கையின் எதிர்பார்ப்புகள் விருப்பங்கள் போன்றவற்றுக்கு ஏற்ப வர்த்தகச் செயற்பாடுகளில் மீண்டும் சில இலகுவான நிபந்தனைகளை இந்தியா விதிப்பதற்குரிய ஏது நிலைகள் தென்படுகின்றன. அதனையே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த ரணில் முற்படுகிறார்.

2015 இல் பதவியில் இருந்த மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் போது எட்கா (Economic and Technology Cooperative Agreement - ETCA) எனப்படும் முக்கியமான வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதை ரணில் தவிர்த்திருந்தார். மகிந்த ஜனாதிபதியாக இருந்தபோது சீபா (Comprehensive Economic Partnership Agreement - CEPA) கைச்சாத்திடப் படவில்லை. 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கமும் அதனைப் புறக்கணித்திருந்தது.

இந்த இரு ஒப்பந்த விவகாரங்களில் இலங்கையிடம் தோல்வி கண்ட இந்தியா, 2020 இல் மீளவும் முன்னெடுத்திருந்தது. ஆனால் உரிய பயன் கிடைக்கவில்லை.

1998 டிசம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை வர்த்தக ஒப்பந்தம் (India-Sri Lanka Free Trade Agreement -ISFTA) முக்கியமானதென்றும் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததாகவும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆணையாளர் டபிள்யு. ஏ விஜயவர்த்தன பிற்.எல்கே (www.ft.lk) என்ற ஆங்கில இணையத் தளத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது எழுதிய கட்டுரையில் விபரிக்கிறார்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய முறையில் இந்தியாவுடன் வர்த்தக உறவு-களை மேற்கொண்டிருந்தால், தற்போதைய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்காது என்ற தொனியில் அந்தக் கட்டுரையில் அவர் இடித்துரைக்கிறார்.

அதேநேரம் இந்தியாவின் எட்கா மற்றும் சீபா உடன்படிக்கை போன்ற வற்றை வேறு வடிங்களில் செயற்படுத்துவது குறித்தே ஆலோசிப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிச் சூழலிலும் ரஷ்ய - உக்ரைன் போரினால் உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளின் பின்னணி யிலும் மீண்டும் இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை உருவாக்கி விரிவுபடுத்த ரணில் முற்பட்டிருக்கிறார்.

அதேநேரம் இந்தியா தொடர்பான சிங்கள மக்களின் அச்ச உணர்வுகள் குறித்தும் இந்தியாவுடன் வர்த்தக உறவுகளைக் குறிப்பாக தொழில்நுட்பத் துறைகளில் இந்தியாவுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போன்ற விடயங்களில் இலங்கைத் தொழிற் சங்கங்கள், இலங்கை மருத்துவர் சங்கம் ஆகியவற்றின் எதிர்ப்புகளைச் சமாளிப்பது அல்லது புரிய வைப்பது போன்ற அணுகுமுறைகளையும் கையாளச் சில உத்திகள் வகுக்கப்படுகின்றன.

அதேவேளை இந்தியா இப்போது வல்லரசு என்ற தோற்றத்தைக் காண்பித்து வருகிறது. அத்துடன் தமிழ் நாடும் பெரிய மாநிலமாகும். இதன் காரணமாக சிங்கள மக்களுக்கு இந்தியா பற்றிய அச்சம் ஒன்று உள்ளது.

குறிப்பாக ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா 1983 இல் இருந்து மூக்கை நுழைக்கிறது, சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கடும் அழுத்தம் கொடுக்கிறது என்ற அதிருப்தி யும் சந்தேகங்களும் சிங்கள மக்களிடமும் சிங்கள ஊடகங்களிடமும் உண்டு.

எனவே தமிழ்த்தேசியக் கட்சிகளின் 2009 இற்குப் பின்னரான பலவீன மான அரசியல் போக்குகள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நல்ல வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றன. ஆகவே இந்தியாவுடன் தொப்புள்கொடி உறவு உண்டென அடிக்கடி மார்தட்டும் தமிழ்த்தேசியக் கட்சிகள், தமது கட்சி அரசியல் செயற்பாடுகளுக்கு அப்பால் ஒழுங்கு சீரான அரசியல் திட்டம் ஒன்றைக் கூட்டாக வகுக்க வேண்டும்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## நவாலிப் பங்கில் அன்னை மரியாளின் இல்ல வழிபாடு

நவாலி பங்குத் திருஅவையில் கடந்த 2022ம் ஆண்டு ஐப்பசி 2ம் திகதி முதல் 2023ம் ஆண்டு வைகாசி 7ம் திகதி வரை புனித அன்னை மரியாளின் திருச்சுரூப வழிபாடு 240 இல்லங்களில் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

தினமும் மாலை 4.30 மணிக்கு 50இற்கும் மேற்பட்ட இறைமக்களோடு குறிப் பிட்ட இல்லத்தில் அன்னையின் சுரூபம் பக்தியாக வரவேற்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட அரியணையில் வைத்து திருச்செபமாலை, பிரார்த்தனை, அன்னையின் புகழ்பாடல் என்பன இடம்பெற்றதோடு, இறுதியில் மகிழ்வூட்டும் சிற்றுண்டி உபசாரமும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இவ் அன்பியப் பகிர்ந்துணர்வு இறை மக்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற் படுத்தியது. ஈற்றில் பங்குத்தந்தை அவ் இல்லத்தைத் தரிசித்து குடும்பத்தாரோடு உறவாடி ஆசீர்வதித்து விடைபெற்றார்.

தொடர்ந்து உறவினர், அயலவர் கள் ஒன்றாகக்கூடிச் செபமாலைத் தியானத் தில் ஈடுபட்டனர். மறுநாள் மாலை 4.30 மணிக்கு மரியாளின் திருச்சொரூபத்தை அடுத்த குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறாக ஏழு மாதங்களாக

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

---

## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவு

மண்ணில் 10 . 04 . 1948



விண்ணில் 10 . 06 . 2022

அமரர்

### அருட்பணி கலாநிதி அன்ரன் மத்தாயஸ்

பங்குக் குருவாய் நற்பணி புரிந்த நற்குருவே!
எல்லோர் மனதிலும் இடம்பிடித்தவரே!
குரு மாணவர்களை கலயங்களாய் உருவாக்கியவரே!
பாதுகாவலன் பத்திரிகை உச்சம் தொட உழைத்தவரே!
அச்சம் இல்லாத பணிகளால் அச்சகம் நிலைக்கச் செய்தவரே!
ஏழைகளின் துயர் துடைத்தவரே
மாணவர்களின் கல்வியை உயர்த்தியவரே!
குடும்பத்தில் நற்சகோதரராய் மிளிர்ந்தவரே!
இறை ஆசீரை எமக்கெல்லாம் வாரி வழங்கியவரே!
நன்று நல்ல பணியாளனே இறைவனில் இறைப்பாறுங்கள்

பிரிவால் துயருறும்
அண்ணன், அக்கா,
நிர்மலா, தர்ஷினி மற்றும்
குடும்பத்தினர்

AD/36

---

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

"சிலுவை நிழல் எந்தன் தஞ்சம் சுகமாய் அங்கு தங்கிடுவேன்"

மண்ணில் 19 . 12 . 1931



விண்ணில் 16 . 04 . 2023

அமரர்

### மேரி திரேசா வின்சென் இஸ்ராயேல்
(யாழ்ப்பாணம்)

அம்மா! சீவியத்தில் உங்களை நேசித்தோம்
எம் மரணத்திலும் உங்களை மறவோம்

36/3 கோவில் வீதி
யாழ்ப்பாணம்

இழப்பின் துயரில்
பிள்ளைகள்
0772454047

AD 32

---

## நினைவழியா நினைவுகளுடன்...

### 9ம் ஆண்டு நினைவு

மலர்வு 08 . 09 . 1945



உதிர்வு 31 . 05 . 2014


அமரர்

### றெஜினா நீக்கிலாப்பிள்ளை

கருணை உள்ளம் கொண்ட எம் அன்பு அம்மா. உம் வஞ்சமில்லா நெஞ்சு, கள்ளமில்லாப் பேச்சு, கனிவான பார்வை, அனைவரையும் காப்பதில் நீர்வள்ளல், கொடுப்பதில் உமக்கு நிகர் யார் அம்மா? நீர் செய்த அனைத்து நற்செயல்களும் இன்றும் எம் மனத்திரையில் பசுமையான காட்சியாய் இருக்கின்றது. எம்மை விட்டுப் பிரிந்து ஒன்பது ஆண்டுகள் ஆனதம்மா... ஆனாலும் நினைவுகளாய் எம்முடன் வாழ்கின்றீர்.

### 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 27 . 08 . 1938



உதிர்வு 21 . 01 . 2021

அமரர்

### சவரிமுத்து நீக்கிலாப்பிள்ளை

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் அன்பிற்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு அப்பா. உடலால் எம்மைப் பிரிந்தாலும் உள்ளத்தாலும் உணர்வுகளாலும் என்றும் எம்முடன் வாழ்கின்றீர். நித்திய இறைவனோடு சங்கமிக்க உமக்காகச் செபிக்கின்றோம் எப்போதும்...

தகவல்: அருட்சகோதரி அஜந்தா(AC)

AD/34

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

# ஆண்டவரே தூய ஆவியை அனுப்பி எம்மைப் புதுப்பித்தருளும்

## வெளியேறு-துணிவுகொள் - கூவியழை

இன்று நாம் கொண்டாடும் தூய ஆவியார் பெருவிழாவுடன், உயிர்ப்புக் காலம் நிறைவுக்கு வருகிறது. இந்த நாளின் விவிலியம், வழிபாடு, இறையியல் மற்றும் ஆன்மீக வளமை மேன்மையானது. 'நற்செய்தியின் மகிழ்ச்சி' (இலத்தீன் மொழியில், 'இவாஞ்சலி கௌதியம்') என்னும் திருத்தூது ஊக்கவுரையில், நற்செய்தி அறிவிப்பாளர்கள் தூய ஆவியாரால் நிரப்பப்பட வேண்டும் என மொழிகிற திருத்தந்தை பிரான்சிஸ் (67600வு. 259), பெந்தகோஸ்தே நிகழ்வை மூன்று சொல்லாடல்களால் எடுத்துரைக்கிறார்: 'வெளியேறுங்கள், துணிவு கொள்ளுங்கள், கூவி அழையுங்கள்.' இச்சொல்லாடல்களின் துணைகொண்டு, இந்நாளின் மறையுண்மை குறித்துச் சிந்திப்போம்.

**அ. நம் வேலிகளிலிருந்து வெளியேற்றுகிறார் தூய ஆவியார்.**
**ஆ. கடவுளின் வியத்தகு செயல்களை அறிவிக்க நமக்குத் துணிவு தருகிறார்.**
**இ. தூய ஆவியாரை அன்றாடம் கூவி அழைத்தல் அவசியம்.**

### அ. நம் வேலிகளிலிருந்து நம்மை வெளியேற்றுகிறார் தூய ஆவியார்

திருத்தூதர்கள் மேலறையில் கூடியிருக்கும்போது அவர்கள்மேல் தூய ஆவியார் பொழியப்படுகிறார். தூய ஆவியாரால் நிறைந்த அவர்கள், முதலில் வேறுமொழிகளில் பேசுகிறார்கள். அவர்களுடைய நாக்குக் கட்டவிழ்க்கப்படுகிறது. அவர்கள் தங்கள் மொழி என்ற வேலியிலிருந்து வெளியேறுகிறார்கள். அப்படி வெளியேறிய அவர்கள், பல மொழிகள் பேசுகின்ற மக்களை எதிர்கொள்கிறார்கள். ஆக, தங்களுக்குத் தாங்களே வகுத்துக்கொண்ட வேலியிலிருந்தும், தங்களுக்கும், பிறருக்கும் இடையே இருந்த வேலியிலிருந்தும் அவர்கள் வெளியேறுகிறார்கள்.

'வெளியே போ!' என்று தூய ஆவியார் என்னை அழைக்கிறார். நான் உடைத்தெறிய வேண்டிய அல்லது தாண்ட வேண்டிய வேலிகள் எவை? எனக்கு நானே வரையறுத்துக் கொண்ட வேலிகளாக அல்லது மற்றவர்கள் எனக்கு இடுகின்ற வேலிகளாக அவை இருக்கலாம். எனக்கும், மற்றவர்களுக்கும் இடையே ஒரு நெருக்கத்தை, இணக்கத்தை, ஏற்படுத்திக்கொள்ளத்தக்க உறவைப் பேணத் தயாராக இருக்கிறேனா? எனக்கு அருகில் இருக்கும் குடும்பம், நண்பர்கள், குழுவினரோடும், தூரமாக இருக்கும் நபர்களோடும் கொள்ளும் நெருக்கம் எப்படி இருக்கிறது? மற்றவர்கள் அனைவரும் 'வெவ்வேறு மொழி பேசக் கூடியவர்கள்' என நான் முற்சார்பு எண்ணம் அல்லது அச்சம் கொள்கிறேனா? நான் ஒருவர் மற்றவரோடு உரையாடும்போது, தூய ஆவியார் எனக்குக் கற்றுத் தருவதற்கு நான் அனுமதிக்கிறேனா?

### ஆ. கடவுளின் வியத்தகு செயல்களை அறிவிக்க நமக்குத் துணிவு தருகிறார் தூய ஆவியார்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 'பர்ரேஸியா' என்னும் கிரேக்கச் சொல்லை அடிக்கடி பயன்படுத்துகிறார். தூய ஆவியார் தருகிற கொடை இது என மொழிகிறார். படைப்புத் திறத் துணிவு என்று நாம் இதை அழைக்கலாம். அதாவது, நம் துணிவின் வழியாக நம் வாழ்வும், மற்றவர்கள் வாழ்வும் மேம்படுகிறது. நாம் விரும்புவதைத் தெளிவாகவும், உறுதியாகவும், கட்டின்மையோடும் சொல்லக்கூடிய ஆற்றலே படைப்புத் திறத் துணிவு. திருத்தூதர்கள் குறிப்பாக, பேதுரு, பெந்தகோஸ்தே நாளில் உரையாற்றுகிறார். அவர் ஆற்றும் உரையின் தெளிவு நமக்கு வியப்புத் தருகிறது. மீன்பிடிக்கும் பின்புலத்திலிருந்து வந்த ஒருவர். தெளிவாகவும், உறுதியாகவும் மறைநூலை மேற்கோள் காட்டிப் பேசுவது, தலைமைச் சங்கத்தாருக்கு வியப்பூட்டுகிறது. 'ஆண்டவராகிய இயேசு உயிர்த்து, விண்ணேற்றம் அடைந்து, கடவுளின் வலப்பக்கம் வீற்றிருக்கிறார்' என்பதே கடவுளின் வல்ல செயல். இரண்டாம் வாசகத்தில் புனித பவுல், கொரிந்து நகரில் உள்ள குழுமத்தார் பெற்றிருக்கிற கொடைகளைச் சுட்டிக்காட்டுகின்றார். இக்கொடைகள் அனைத்தும் பொது நன்மைக்காகவே வழங்கப்பட்டுள்ளன. அந்தப் பொது நன்மை என்ன? கடவுளின் வியத்தகு செயல்களைக் குழுமமாக எடுத்துரைப்பது, மாற்று வாழ்வு வாழ்வது.

இன்று நான் துணிவிழந்து நிற்கும் பொழுதுகள் எவை? படைப்புத் திறத் துணிவை நான் பெற என்ன செய்ய வேண்டும்? ஆண்டவர் என் வாழ்வில் எனக்கு ஆற்றிய அரும்பெரும் செயல்களை நான் எடுத்துரைக்கத் தயாராக இருக்கிறேனா? தூய ஆவியார் எனக்கு வழங்கியுள்ள கொடைகள் குறித்து, நான் அக்கறை உள்ளவனாக இருக்கிறேனா? தூய ஆவியாரின் கொடைகளை முன்னிட்டு நான் மற்றவர்களை வேற்றுமைப்படுத்திப் பார்த்தால், அந்த மனநிலை விடுக்க நான் தயாராக இருக்கிறேனா?

### இ. தூய ஆவியாரை அன்றாடம் அழைத்தல் நலம்

மூவொரு இறைவனில் அதிகமாக மறக்கப்பட்ட நபர் தூய ஆவியார்தாம். தம் இறுதி இராவுணவில், தூய ஆவியாரைத் தம் சீடர்களுக்கு வாக்களிக்கிற இயேசு, 'தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் உங்களை வழிநடத்துவார்' (காண். யோவா 15:26, 16:13) என, மொழிகிறார். தூய ஆவியாரைப் பெற்றவுடன், திருத்தூதர்கள் இயேசுவுக்குச் சான்று பகர்கிறார்கள். தூய ஆவியாரின் பணிகளாக மூன்றை வரையறுக்கிறார் இயேசு: துணையாக இருத்தல், உண்மையை வெளிப்படுத்துதல், வழிநடத்துதல், நம் வாழ்வில் நாம் பல நேரங்களில் துணையின்றி நிற்கிறோம். உண்மையைப் பொய்யிலிருந்து பகுத்தாய இயலாமல் நிற்கிறோம். திசைதெரியாமல் நிர்கதியாக நிற்கிறோம். இவ்வேளைகளில் தூய ஆவியாரை நாம் கூவி அழைத்தால், அவர் நமக்குத் துணையாளராக வந்து, உண்மையைத் தெளிவுபடுத்தி, வழிநடத்துகிறார். தூய ஆவியார் இல்லாமல் செய்யப்படும் செயல்கள் அனைத்தும் வெறுமையே என்கிறார் திருத்தந்தை. தூய ஆவியாரை நாம் அழைக்க வேண்டுமெனில், அவரை அறிந்தவர்களாக நாம் இருக்க வேண்டும். நம் வாழ்வு ஊனியல்பை விடுத்து, ஆவிக்குரிய இயல்பை அணிந்திருக்க வேண்டும் (காண். கலா 5:18-24). நற்செய்தி வாசகத்தில் தம் திருத்தூதர்கள் மேல் ஊதுகிற இயேசு தூய ஆவியாரை அவர்களுக்கு அளிக்கிறார், அவர்கள் மகிழ்ச்சியும், அமைதியும் பெறுகிறார்கள்.

நான் ஆவியாரைக் கூவி அழைக்கிறேனா? அவருக்கு நான் என் வாழ்வில் தரும் இடம் என்ன? அவரை அழைப்பதன் வழியாக என் வாழ்வைப் புதுப்பித்துக்கொள்ள நான்



தயாராக இருக்கிறேனா? என் உள்ளொளியாக அவர் சுடர்விடுவதற்கு நான் அனுமதிக்கிறேனா? வாழ்வில் கடினமாக இருக்கும்போது, தெரிவுகள் பாதைகள் தெளிவு இல்லாமல் இருக்கும்போது அவரின் துணை கொண்டு தெரிவுகளை மேற்கொள்ளவும் தெளிவு பெறவும் தயாராக இருக்கிறேனா? அவர்; வழியாகவே நான் கடவுளை அப்பா, தந்தாய் என அழைக்கிறேன் எனில், நான் எப்போதெல்லாம் இறைவேண்டல் செய்கிறேன்? அவரின் நெருப்பு இன்று என் வாழ்வில் தூய்மையாக்க வேண்டிய பகுதிகள் எவை? ஆண்டவரின் ஆவி சாமுவேலைவிட்டும், சவுலைவிட்டும் அகன்றது போல, என்னைவிட்டும் அகன்று விட்டாரா? நிற்க.

'ஆண்டவரே, உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கிறீர்!' (திபா 104) என்று இன்றைய பதிலுரைப்பாடலில் பாடுகிறோம். நம் வாழ்வை தூய ஆவியார் புதுப்பிப்பாராக! "தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம். எனவே, அந்த ஆவி காட்டும் நெறியிலேயே நடக்க முயலுவோம்" (கலா 5:25) என்னும் பவுலின் சொற்களை நினைவில் கொள்வோம்.

**பாதுகாப்பு வளையம் மற்றும் வேலிகளை விட்டு வெளியேறுவோம்!**
**இறைவனின் வியத்தகு செயல்களை அறிவிக்கும் துணிவு பெறுவோம்!**
**அவரை அன்றாடம் – கூவியழைப்போம்.**

# ஆவியார் வழியில் நம் அன்னை மரியாள்



தூய ஆவியின் ஆற்றலினால்
தூய அன்னை உதரத்திலே
மாய உலகை வென்றிடவே
மன்னவன் இயேசு உதித்தாரே!

கடவுளின் தூதர் யோசேப்பிடம்
'கருவுற் றிருப்பது ஆவியாலே
திடங்கொள் வீரென் றுரைத்திடவே
துணிந்து நின்றார் கண்ணியமாய்!

கன்னி மரியிடம் இறைதூதர்
கருவுற் றிடுவீர் ஆவியாலே
என்று ரைத்த வேளையிலே
இனிதே மகிழ்ந்தார் இயேசுவின்தாய்!

தூய ஆவியால் கருவுற்ற
தூய எலிச பெத்தினையும்
தூய மரியா சந்தித்தார்
திடமாய் வாழ்த்தி மகிழ்ந்தாரே!

தூய யோவான் இறைமகனின்
தூய பாதையை செப்பனிட்டார்!
தூய அன்னை மரிவழியே
தூயவர் இயேசு தோன்றினாரே!

ஆவி யாலே திருமுழுக்கை
அடைந்த இயேசு திடமானார்!
தூய வழியே தடம்பதித்து
துன்பம் நீக்கப் பலியானார்!

இறையரு ளாலே உயிர்த்திட்ட
இனிய இயேசுவின் வழியினிலே
நிறைவாய் நடக்க தூயஆவி
நிதமும் துணையாய் ஆனாரே!

ஆவி யாலே திடம்பெற்ற
அன்பின் சீடர் அனைவருமே
பாவி மாந்தர் விழிப்படைய
பாடு பட்டனர் இறைவழியே!

அன்னை மரியின் அடிச்சுவட்டில்
அன்புப் பயணம் மேற்கொண்டு
தன்னை முழுதும் காப்பீரே
தாயாம் திருஅவை வழியினிலே!

விசுவா சத்தைக் கைக்கொண்டால்
விடுதலை பெறுவீர் மானிடரே!
அசுத்த ஆவியும் அகன்றிடுமே
அன்னை மரிவழி செபித்தாலே!

மீளாத் துயிலில் நிறைந்திருந்த மாண்புறு
தாயை விண்சேர்த்தார்!
ஆளா கிடுவீர் அன்னைவழி
அன்பு நிறைந்த சோதரரே!

தூய ஆவியின் துணைபெற்று
தூயவர் சீடர் யாவருமே
மாய உலகை மாற்றிடவே
மண்ணகம் எங்கும் சென்றனரே!

"உலகின் எல்லா இனத்தார்க்கும்
உரைப்பீர் நல்லச் செய்தியினை"
உலக இரட்சகர் உத்தரவால்
உவகை கொண்டனர் சீடரெலாம்!

# "கனவு காண்போம்"

கரைவையூர்ச் செல்வம்

*(ஓர் இடைவேளையின் பின்னர் தொடர்கின்றேன். இக் கட்டுரைத் தொடரை)*

**கனவில் யாழ் மறைமாவட்டம்.**

இரண்டாயிருத்து இருபத்து நான்காம் ஆண்டு உரோமையில் நடைபெற இருக்கும் திரு அவையின் மாநாட்டைப் போப் பிரான்சிஸ் அறிவித்த கையோடு, யாழ் திருஅவை விழித்துக் கொண்டது. கட்டுரைகள் எழுதப்பட்டன: உரைகள் கொடுக்கப்பட் டன: பங்கு தோறும் மக்களின் கருத்துக்கள், அபிப் பிராயங்கள் கேட்டறியப்பட்டன: கருத்தமர்வுகள் முன் னெடுக்கப்பட்டன. யாழ் மறைமாவட்டம் ஒரு எழுச்சி பெற்ற உணர்வு! பாராட்டப்பட வேண்டும்.

பரவலாக நடைபெற்ற இந்த ஆயத்தம் தொடர்ச்சியாக ஆழமாக்கப்பட்டதா? என்றொரு கேள்வி என்னுள் எழுகின்றத. அன்றேல், ஆடுமேய்ந்த நிலையா? நான் குருமடத்தில் இருந்த காலத்தில், அதிபருடைய சிபாரிசில் பிரான்ஸ் நாட்டவராகிய எ.ஜி. சேட்டிலான்ஞ் என்பவர் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் ஆண்டு எழுதிய Intellectual life என்ற நூலைப் படித்த ஞாபகம் இன்று மேலெழுகின்றது. இவர் டொமினிக் துறவற சபையைச் சார்ந்தவர். இக்கட்டுரையை முதலில் நான் எழுதிய நாள் 03.03.2023, புனித டொமினிக் அவர்க ளுடைய ஞாபக நாள். என்னே! இந்த நிகழ்வுப் பொருத்தம் சேட்டிலான்ஞ் தனது நூலில் ஒரு மாட்டைப் பற்றி எழுது கிறார். மாடு வைக்கோலை நிறைய வாயில் கவ்விக் கொண்டு, ஓர் அமைதியான சூழலில் தனிமையில் இருந்து கவ்விய வைக்கோலை மெதுவாக, மீட்டு மீட்டு அசை போட்டு உண்ணும். இது, உண்மையிலேயே ஓர் அருமை யான காட்சி

'கற்க கசடறிய" என்ற வள்ளுவரின் கூற்று, அறி வைப் பழுதின்றிக் கற்று ஆழப்படுத்த வேண்டுமென்று தானே அர்த்தம் கொள்கின்றது. இந்த மாடுகளுக்குத் தெரிந்த உண்மை. கோடிக்கணக்கான மக்களுக்கு பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் அரசியல் மதத்தலைவர்கள் உட்படத் தெரியாமல் போனது தானே கல்வியின் வீழ்ச்சிக்குக் காணரம்? கல்வி கயமையை வளர்ந்ததிற்குக் காரணம்.

**ஆழத்தில்தான் முதிர்ச்சி**

ஆழத்தில் தான் மனித முதிர்ச்சி உண்டு. அத்தோடு இணைந்து வருவதுதான் ஆன்மீகம். இந்த இரண்டும் உலகளாவிய ரீதியில் ஒரு பாரிய வறுமையை உருவாக்கியுள்ளது. போப் பிரான்சிஸ் அவர்களுடைய கனவில் ஆழம் உண்டு. ஆன்மீகம் உண்டு: தூரத்து நோக்கமுண்டு.

**முரண்பாடு**

சாதிக்கொரு கோவில் கட்டி (முன்னோர் தெரிந்தோ தெரியாமலோ செய்த குற்றம்) அந்தச் சாதி யினர் எங்கள் கோவிலின் பாடகர் குழாமில் இணைந்து பாடக்கூடாது. அந்தக் கோவிலைச் சேர்ந்தவர்கள் எங்கள் கோவிலை இறைவார்த்தையை எடுத்தியம்பக் கூடாதென்று இன்றும் - இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் - எங்கள் மத்தியில் சாதிவெறி பிடித்துப் பத்திரகாளிகளாக மாறி நிற்பது கிறிஸ்தவத்திற்கு கிஞ்சித்தும் சான்று பகரும் செயல் அல்ல இவ்விடயத்தில், சில பங்குகளில் சிற்றளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை மறுப்பதற்கில்லை. அவர்களைப் பாராட்டுகின்றோம். கோவில்களில் ஏன் வாழ்விலும் கூட சாதிவெறி பிடித்து நிற்போர் போப் பிரான்சிஸ் காணும் கனவில் இணைவார்களா?

**சாதாரண பயணமல்ல**

ஒரு பெரிய வாகனத்தில் ஒரு சகிப்புத்தன்மையுடன் பல்வேறுபட்ட மக்களுடன் மடுவுக்குச் சென்று வழிபட்டு வரும் பயணமன்று போப் பிரான்சிஸ் காணும் கனவு. இது ஒரு திருயாத்திரை. ஒரு நெடிய பல திருப்புமுனைகளைக் கொண்ட திருயாத்திரை. இந்த நெடிய பயணத்தில் கூடிப் பயணிப்போர் ஒருவரை ஒருவர் சந்தித்து, தம்தம் கதை-களைப் பகிர்ந்து, ஒருவருக் கொருவர் செவிமடுத்து, ஒரு-வரை ஒருவர் புரிந்து, ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டு பயணிக்கும் பொழுது அப்பயணம் ஓர் ஆன்மீகப் பயணமாக முகிழ்ந்தெழும். இப்பயணத்தில் பன்மையில் ஒற்றுமை காண்பர் கூடிப் பயணிப்போர். அங்குதான் 'அன்பிற்கும் உண்டோ அ[illegible]வரின் கேள்விக் குப் பதில் தோன்றும். இரு வருடங்களாக இப்பயணத்திற்கு ஆயத்தம் செய்தோம். ஆனால், பயணிக்க ஆரம்பித்தோமா? இது ஒரு சவால் நிறைந்த கேள்வி. சிலர் ஆயத்தம் செய்வதிலேயே காலத்தைக் கழிப்பர். ஆனால் பயணிக்க முன்வர மாட்டார்கள்.

குருத்துவத்திலும், துறவறத்திலும், திருமணத்திலும் ஊரைக்கூட்டிப் பாடி மகிழ்ந்து, அர்ப்பணம் செய்து, உண்டு விடை பெறுகின்றோம். இந்த அர்ப்பணங்கள் வாழப்படுகின்றனவா? ஆண்டுதோறும் அர்ப்பணங்கள் வார்த்தையளவில் புதுப்பிக்கப்பட்டு, பின்னர் ஆண்டுகள் பல ஓடிய பின்னர் அந்த அர்ப்பண நாளுக்கு வெள்ளிவிழா, பொன்விழாக்களைப் பல இடங்களில் மீண்டும் ஊரைக்கூட்டி பாடி மகிழ்ந்து, மாலைகள் அணிவது, கேக்குகள் வெட்டி வார்த்தை அளவில் அர்ப்பணம் 'சொல்லி' உண்டு மகிழ்ந்து 'போட்டு வாறோம்' சொல்லி கலைந்து செல்வோம். இங்கெல்லாம் ஆன்மீகத்தின் வறுமை கொடுமையான வறுமையாக மாறிவிட்டது.



**முடிவும் தொடக்கமும்**

2024 ஆம் ஆண்டில் உரோமையில் நடை பெறும் மாநாட்டுடன் பயணம் முடிவதல்ல. அங்கிருந்து தான் பயணம் ஒரு புதுப் பொலிவுடன் ஆரம்பிக்கும். நாம் அதற்குத் தயாரா?

**இரண்டு சதப் பங்களிப்பு**

மாமன்றத்திற்கு (கூட்டொருங்கியக்கம்) ஆயத்தம் செய்த காலத்தில் நீர் தங்கியிருந்தீர்? என்று உங்களில் சிலர் கேட்கலாம். நடந்தேறிய நிகழ்வுகள் அத்தனையிலும் தூர நின்று வேடிக்கை பார்க்கவில்லை. பங்குகொண்டேன், அறிவுடையோர், ஆற்றல் உடையோர் திறமையாக ஆயத்தங்கள் செய்த பொழுது எனது பங்களிப்புக்கு அங்கு தேவையிருக்கவில்லை. அதை நல் மனதுடன் ஏற்றுக் கொண்டேன். மாறாக அவற்றை உள்வாங்கினேன்.

போப் பிரான்சிஸ் கூட்டாக எழுதிய 'கனவு காண்போம்' என்ற நூலை ஆவலோடு படித்தேன். உள்வாங்கினேன். என்னுள் ஓர் ஆர்வம் எழுந்தது. அதேவேளை 'கூட்டொருங்கியக்க ஆயத்தம் கொஞ்சம் தொய்ந்து விட்டதோ' என்றொரு எண்ணமும் தோன்றியது. தொய்வு நீடித்தால், ஆர்வம் தொலைந்து விடும். பின்னர் தொலைந்ததைக் கிண்டி எடுத்துப் புத்துயிர் அளிப்பது கடினம். இச் சிந்தனை மேலோங்க இந்த தொய்ந்த வேளையில் எனது இரண்டு சதப் பங்களிப்பை (Two cents work) பகிரலாமென்று துணிந்தேன். காவலன் வாசகர்கள் இதை ஏற்றுக் கொள்வீர்களென்று எதிர்பார்க்கின்றேன். ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் பிரச்சினையேதும் இல்லை. சக்தி T.V. சொல்ல முன்னரே நான் எனது உரைகளின் ஆரம்பத்தில் சொல்வதுண்டு: 'சொல்வது எனது கடமை ஏற்றுக் கொள்ளாததும் ஏற்றுக் கொள்வதும் உங்கள் முடிவு' இன்னுமொரு விடயம் தொய்ந்தவற்றையும் நொந்தவற்றை யும் தூக்கிவிடும் 'மெசியா' நானல்ல. அதிலும் எனக்குத் தெளிவுண்டு. மேற்கூறியது போல இக்கட்டுரைத் தொடர்கள் எனது இரண்டு சதப் பங்களிப்பு அவ்வளவுதான். யாழ் ஆயர் அவர்கள் பங்குகளுக்கு திருவழிபாடு நடத்தச் செல்லும் வே-ளைகளில், தமது திருவுரைகளில் கூட்டொருங்கியங்கத்தைப் பற்றிச் சொல்லத் தவறுவதில்லை. பங்கு விழாக்களிலும் பல குருக்கள் தங்கள் திருவுரைகளில் கூட்டொருங்கியக்கம் பற்றிய வினாக்களைக் கொடுத்து வருகிறார்கள். இவற்றையும் இங்கு பதிவு செய்வது பொருத்தமாக இருக்கும்.

**அழிவை எதிர்வுகூறும் தீர்க்கதரிசிகள்**

அழிவை எதிர்வு கூறும் சில தீர்க்கதரிசிகளை நான் சந்தித்துள்ளேன். ஒரு துன்பகரமான நிகழ்வு நடந்த பின்னர் 'இது நடக்குமென்று நான் முன்னரே அறிந்திருந்தேன்' என்று சொல்லும் சில தீர்க்கதரிசிகளையும் நான் சந்தித்துள்ளேன். எனது கேள்வி "முன்னரே தெரிந்திருந்தால் அவற்றை இவர்கள் எடுத்துச் சொல்லி அவை நடவாதவாறு தடுத்திருக்கலாமல்லவா? வருமுன் காப்பது விவேகமல்லவா? இவர்கள் ஏன் அதைச் செய்யவில்லை?

நல்லதைச் செய்ய முற்படும் பொழுது அதைத் தடைசெய்ய எதிர்வு கூறுவோரும் உள்ளனர். இப்படிப்பட்டவர்கள் திருஅவையில் பல்வேறு மட்டங் களில் உள்ளார்கள்.

'சீர்திருத்தங்களைக் கொண்டுவரக் கூடிய ஆற்றல் திருஅவைக்கு உண்டென்றாலும், அந்தச் சீர்திருத்தங்களை போப் பிரான்சிஸ்தான் கொண்டு வருவார் என்பதில் எனக்குச் சந்தேகமுண்டு என்று ஜேர்மன் நாட்டு ஆயர் அவைத் தலைவர் ஆயர் ஜேர்ஜ் பற்சிங் ஜேர்மன் நாட்டு நாளேடொன்றிற்கு அளித்த நீண்டவொரு பேட்டியில் சென்ற வைகாசித் திங்கள் 26ம் நாள் (2022) குறிப்பிட்டுள்ளார். இதற்கு ஓர் உதாரணமாக அமேஷன் மாநாட்டில் திருமணமாகியவர்களை குருக் களாகத் திருநிலைப்படுத்தலாம் என்று பெரும்பான்மையினர் கருத்துத் தெரிவித்த பொழுதும் போப் பிரான்சிஸ் அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்று கூறியுள்ளார். தான் போப் பிரான்சிஸ் உடன் பல தடவைகள் உரையாடி உள்ளதாக வும், அவரின் எண்ணக் கருக்களை தான் அறிந்திருப்பதாகவும் அவர் அந்தப் பேட்டி யில் தெரிவித்துள்ளார். அடிப்படை சீர்திருத்தங் களை போப் பிரான்சிஸ் கொண்டுவர மாட்டார் என்று குறிப்பிட்ட ஆயர், பெண்களைக் குருக்க ளாக திருநிலைப்படுத்துவதையோ, திரு மணம் செய்தோரை குருக்களா திருநிலைப் படுத்துவதையோ, ஓரினத் திருமணங்களை ஏற்றுக் கொள்வதையோ அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுள் திருஅவையில் எதிர்பார்க்க முடியாது என்று ஆயர் ஆணித்தரமான ஓர் எதிர்வு கூறியுள்ளார்.

ஆயர் அவர்களின் கருத்துக்கு போப் பிரான் சிஸ் பதிலளித்துள்ளார். அது என்ன பதில் என்று பார்க்க முன்னர் சில கேள்விகள் எழுகின்றன.

ஆயர் பற்சிங் குறிப்பிட்ட மூன்று தனித்தனி விடயங்கள்தான் அடிப்படைச் சீர்திருத்தமா, இவை தான் போப் பிரான்சிஸ் அவர்களின் கனவா? ஆயர் அவர்களின் எதிர்பார்ப்பு போப் பிரான்சிஸ் அவர் களுடைய பாரிய கனவில் சில முட்களான பிரச்சினைகளைச் சேர்க்கலாமா? போப் பிரான்சிஸ் ஒரு தூரத்துப் பார்வையில், இன்றைய மூடிய நிலையில் உள்ள திருஅவையில் ஒரு பாரிய சீர்திருத்தத்தைக் கொண்டுவருவதை விரும்பாமல் அதைத் தடைசெய்யும் நோக்குடன் சில சிறிய பிரச்சினைகளை முன்னிறுத்தி, சீர்திருத்தத்திற்கு எதிராகச் செயற்படும் செயல்தான் ஆயர் பற்சிங் அவர்களின் செயலா?

(கனவு தொடரும்...)

## அமைதி

அமைதியை விதைப்போர் மட்டுமல்ல: அமைதியை விரும்புவோரும் இறைவனின் மக்களே!

பரபரப்பான இந்த உலகம் அமைதியைத் தொலைத்துவிட்டு தேடிக் கொண்டிருக்கிறது.

சில இடங்களில் அமைதியே பேராபத் தாகவும் இருக்கிறது.

"அமைதியின் தூதுவனாய் என்னைப் பயன்படுத்தும்" என்ற அறைகூவல் உச்சரிக்கப் படும் போதெல்லாம் அதற்கான நமது பொறுப்பும், கடமையும் நமது நினைவுக்கு வரவேண்டும்.

*அமைதியை விரும்புவோம்*
*அமைதியைக் காப்போம்*
*அமைதியை விதைப்போம்*

இருக்கும் இடத்தில் அமைதியை விதைப் பவர் அனைவராலும் அன்பு செய்யப்படுவார்.

அமைதியின் தூதுவராய் திகழ்வோமா?



# செபமாலையின் வீரர்கள்

01

## ஒரு ஆன்மீக ஆயுதத்தின் வரலாறும் அதன் வீரர்களும்

**Champions of the Rosary - The History and Heroes of a Spritual Weapon**
**by Donald H. Calloway MIC (Marian Fathers of the Immaculate Conception)**

**(–தமிழில் – அருட்பணி.எஸ்.வி.பி. மங்களராஜா) டொனால்ட் எச். கலோவே**
MIC (Marian Fathers of the Immaculate Conception)
அமல உற்பவ மரியாளின் குருக்கள் துறவறசபை

டொனால்ட் எச். கலோவே அமல உற்பவ மரியாளின் குருக்கள் சபை (Donald H. Calloway, MIC. Marian Fathers of the Immaculate Cunception) அமெரிக்காவிலுள்ள இரக்கத்தின் அன்னை மாகாணத்தின் பரிசுத்த அமல உற்பவ மரியாளின் மரியாளின் குருக்கள் சபையின் உப மாகாண முதல்வர் எழுதி 2016ம் ஆண்டு வெளியிட்ட Champions of the Rosary – The History and Heroes of a Spiritual Weapon (செபமாலையின் போராளிகள் ஒரு ஆன்மீக ஆயுதத்தின் வரலாறு, அதன் வீரர்கள்) என்னும் காலத்தின் தேவையானதொரு திருச்செபமாலை சொல்லிச் செபிக்கத்தூண்டும் ஒரு நூல் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. தமிழ் மக்களும் குறிப்பாக இலங்கைவாழ் கத்தோலிக்க மக்களும் இதில் உள்ளவற்றை அறிந்து பயன் பெறவேண்டுமென்பது எமது அவா. அதற்கு இம்மகத்தான நூலை தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்.

இலங்கையிலும் 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் கத்தோலிக்க திருமறையை அறிமுகம் செய்த காலத்தில் இருந்து செபமாலை சொல்லிச்செபிக்கும் முறை பிரபல்யம் பெற்று வந்தது. பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் புனித யோசப்வாஸ் வருகையில் இருந்து செபமாலை பக்தி முயற்சி மேலும் பிரபல்யம் அடைந்தது. நாளடைவில் நாட்டில் உள்ள ஆலயங்களில் பல புனித கன்னி மரியாளுக்கும், குறிப்பாக செபமாலை மாதாவிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு வந்தன.

உலகனைத்திலும்குறிப்பாகஎமதுநாட்டிலும்கத்தோலிக்க கிறிஸ்தவர்களை வெளிப்படையானதொரு அடையாளத்தினால் தனித்துவமாகக்காட்டுவதாயின் அது திருச்செபமாலையாகத்தான் இருக்க முடியும் என்பது எனது எண்ணம். புத்திவிபரம் அறிந்த ஒவ்வொரு கத்தோலிக்கரும் தம்வசம் ஒரு செபமாலையைச் சொந்தமாக எப்போதும் வைத்திருக்க விரும்புவார். பலர் ஆலயங்களிலும் குடும்பச்செபமாலை வேளைகளிலும் மட்டுமல்ல, மற்ற நேரங்களிலும் செபமாலை மணிகளை உருட்டிச்செபிப்பதை அவதானிக்கலாம். ஆனால் எல்லோரும் இதன் அர்த்தத்தை உணர்ந்து காரணிக்கங்களில் உள்ள மறையுண்மைகளைத் தியானித்து செபிக்கின்றார்களா என்பது கேள்விக்குறியே.

முதலில் வந்த துறவற சபை மறைபணியாளர் கன்னி மரியாள் மீதுகொண்ட பக்தியை மட்டுமல்ல செபமாலை சொல்லிச் செபிக்கும்பக்தியையும்ஊக்குவிக்கத்தவறியதில்லை. குறிப்பாகசெபமாலை சொல்லிச் செபிக்கும் பக்தியை ஊக்குவித்து வளர்ப் பதைத் தமது விசேட பணியாகக் கொண்ட புனித சாமிநாதர் சபையினர் இன்றும் கூடுதல் முனைப்புடன் செபமாலைப் பக்தி முயற்சியை வளர்த்தனர். அத்துடன் அவர்கள் செல்லுமிடமெல்லாம் செபமாலை அன்னைக்கென அர்ப்பணிக்கப்பட்ட விசேட ஆலயங்களையும், செபமாலைப் பக்திச் சபைகளையும் ஏற்படுத்தி, ஊக்குவித்து வளர்த்தனர்.

போர்த்துக்கேயர் காலத்தின்பின் வந்த புனித ஜோசப் வாஸ் அடிகளின் ஒரட்டோரியன் சபையினரும் பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் வந்த அமல மரித்தியாகிகள் சபையினரும் செபமாலைப் பக்தியை மிகவும் ஊக்கத்துடன் வளர்த்தெடுத்தனர். இது பற்றிய விபரங்களை அருட்பணி பேர்ணியோலா அவர்களின் இலங்கைக் கத்தோலிக்க திருமறை பற்றிய நூல்களிலிருந்து தொகுத்து தருகின்றோம். இதனாலேயே இன்றும் இலங்கையில் உள்ள கத்தோலிக்க யாத்திரைத்தலங்களில் அனேகமானவை கன்னி மரியாளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவையாகவும் அவற்றுள் மிகமுக்கியமானதாக மருதமடு செபமாலை மாதா யாத்திரைத் தலமும் விளங்குகின்றது.

இவ்வாறாக இலங்கையில் மற்றெந்த நாடுகளுக்கும் குறைவுபடாத முறையில் கத்தோலிக்கரை அடையாளப்படுத்தும் சின்னமாகச் செபமாலை விளங்குகின்றது. ஆயினும் எல்லாக் கத்தோலிக்க மக்களும் இந்தச் செபமாலை என்னும் பலமான ஆயுதத்தைப் பயன்படுத்தித்தமது மறை நம்பிக்கையை வளர்க்க வேண்டுமென்பதற்காகவும் நாட்டு மக்கள் தமக்கு வேண்டிய நீதியையும், சமாதானத்தையும், அன்பையும், பெருந்தன்மையையும் வளர்த்தெடுக்கவும் இச்செபமாலை என்னும் ஆயுதம் துணைபுரியவும் இக்கட்டுரை தொடர் உதவ இறைவனையும் அதற்குப் பரிந்துரைக்க இறையன்னையையும் வேண்டுவோம்.

**திருச்செபமாலை**
**திருவிவிலியம்**
**திருஅவை**
**வரலாறு**

**முன்னுரை**

❖ திருச்செபமாலை ஒரு ஆன்மீக ஆயுதம், ஒரு விண்ணக வாள், இறை கைவினைஞரால் உருவாக்கப்பட்ட ஒரு ஆயுதம்.

❖ எல்லா வாள்களும் செய்யப்படுவதற்குக் காலமும் திறமையும் தேவை - ஆனால் இந்த விண்ணக வாளைச் செய்வதற்கு மிகப்பெரிய முயற்சிகள் - பல நூற்றாண்டுகள் தேவைப்பட்டன.

❖ இந்த ஆயுதம் மற்ற ஆயுதங்களைப் போன்றதல்ல. இதற்குக்கொடிய பாரிய மிருகத்தைக் கொல்லவும் வல்லமையுண்டு, பாவிகளை மனமாற்றவும், இதயங்களை வெல்லவும் ஆற்றலுண்டு.

❖ இந்த வாளின் கூரிய முனை என்றும் வாழும் இறைவார்த்தையால் உருவாக்கப்பட்டது. இறையூக்கத்தால் உந்துசக்தியைப் பெறுகின்றது. இது விண்ணக அரசியிடமும் அவரது தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

❖ இம்மகத்தான ஆயுதம் இறுதியில் போருக்குத் தயாரானதும், இறைகைவினைஞரால் இதனுடைய வல்லமையை வெளிப்படுத்த ஆயத்தமானதும், விண்ணக அரசியாகிய கன்னிமரியாள் உலகில் ஒரு ஆன்மதாகமுள்ளதொரு போதகரை இதன் நிறுவுநராகத் தேர்ந்தெடுத்தார். இவ்வரசிதான் இந்நிறுவுநருக்கு இவ்வாயுதத்தைப் படைக்கலனாக அணிவித்து இதனை உலகின் நாலா திசையிலும் போதிக்கப்பணித்தார்.

❖ இந்தப் புனித மனிதன் வழியாக ஒரு போதகர்கள் சபை யொன்று உருவாக்கப்படும். இச்சபை இவ்வாயுதத்தை வெற்றி வீரர்களாக ஏந்தியவர்களாக அது தன்னகத்தே கொண்டுள்ள மறையுண்மைகளைப் பரப்பவிரும்புபவர்களுக்கும் கையளிக்கும்.

❖ திருஅவை வரலாற்றில் இப்பணியை ஆற்றுபவர்கள் திருச்செபமாலைப் பக்தி முயற்சிகளைப் பரப்பும் வெற்றி வீரர்களாக வலம் வருவார்கள்.

❖ இவ்விடத்தில் தான் திருச்செபமாலையின் உருவாக்கத்தினதும் அதனை வெற்றிகரமாக உலகறியப்பண்ணியவர்களதும் வரலாறு உருவாகின்றது.

### வானதூதரின் வாழ்த்திலிருந்து 12ம் நூற்றாண்டு வரை செபமாலை தயாராகு முன் இடம் பெற்ற திருவிவிலிய, திருஅவை வரலாற்றுக் குறிப்புக்கள்

❖கடவுளின் திருவுளப்படி ஒரு பெண்ணும் அவளது வழித்தோன்றலும் அரக்கப்பாம்பை வெற்றிகொள்வது வரலாற்றின் முக்கிய நிகழ்வாக - தொடங்கி முடியும் நிகழ்வாக இடம் பெறுகின்றது. (தொ.நூ.3:15). உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங் காலைக் காயப்படுத்துவாய் என்றார்.

(தி.வெ.12:1) வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவருடைய காலடியிலிருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார். அவர் கருவுற்றிருந்தார்.

❖ இந்தப் பெண்தான் பரிசுத்த கன்னிமரியாள். அவளின் வழித்தோன்றல் தான் இயேசு கிறிஸ்து, உலகின் மீட்பர், அரக்கப் பாம்பு தான் லூசிபர்.

❖ எந்த யுத்தத்திலும் வெற்றிவாகை ஒரு பலமான ஆயுதத்தின் வழியாகத்தான் சூடப்படுகின்றது. இந்த யுத்தத்தில் ரக்கப் பாம்பு தோற்கடிக்கப்படுவதற்குப் பாவிக்கப்பட்ட ஆயுதம் இறை-மனிதன் இயேசுக் கிறிஸ்துவின் பாஸ்கா மறைநிகழ்வாகும். (இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு) அவரது வாழ்வு, பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய புனித மறைநிகழ்வுகளுக்கு தீமையை வென்று ஆன்மாக்களை விடுவிக்கும் வல்லமையுண்டு. இவை சாவை வெற்றிகொள்வதற்குப் பயன்படும் ஆயுதங்களாகும், இவற்றில் லூசிபர் தோற்கடிக்கப்பட்டு, நம்பிக்கை கொள்ளும் ஆன்மாக்கள் விண்ணக அரசில் நித்திய வாழ்வைப் பெறுகின்றனர்.

❖ கன்னி மரியாளின்றி இம்மறை நிகழ்வுகளை எம்மால் அனுபவிக்க முடியாது. இறையரசில் மரியாள் மீட்பரின் தாய் மட்டுமல்ல புதிய ஏவாளும் உயிர் வாழும் எல்லாவற்றுக்கும் தாயாகவுமிருக்கின்றாள். அத்துடன் அவள் தமது இறைமகனுக் கருகாமையில் அரியணையில் அமர்ந்து ஆட்சி செலுத்தும் அன்னையாகவும், அரசியாகவும் வீற்றிருக்கின்றாள். மேலும் இயேசு தத்தெடுத்த எல்லாச் சகோதர சகோதரிகளுக்கும் ஆன்மீகத் தாயாகவும் அவள் விளங்குகின்றாள். அவளது ஒரே விருப்பம் இவ்வரசனுக்குப் பணிபுரிவதும் தமது ஆன்மீகப் பிள்ளைகள் தமது முதற்பேறான மகனைப்போன்றவர்களாக வாழ உதவுவதுமாகும்.

❖ பசாசிற்கு இதெல்லாம் நன்கு தெரியும். பசாசு அவ்வரசியாகிய அன்னையையும் அவளது ஆன்மீகப் பிள்ளைகளையும் முற்றாக வெறுக்கின்றான். வரலாறு முழுவதும் அவரின் குதிங்காலைத் தீண்டுவதற்கும், கர்ச்சிக்கும் சிங்கம்போல உலகெங்கும் சுற்றித்திரிந்து அவளின் பிள்ளைகளை விழுங்குவதற்கு முயன்றுகொண்டிருக்கின்றது. (தி.வெ.12:17) இதனால் அரக்கப்பாம்பு அப்பெண்மீது சினம்கொண்டு அவருடைய எஞ்சிய பிள்ளைகளோடு போர் தொடுக்கப் புறப்பட்டுச் சென்றது. (1பேதுரு.5:8) “உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம் போலத் தேடித்திரிகிறது”

❖ இதனை முன்னுணர்ந்த இறை கைவினைஞராகிய கடவுள் இந்தப் பெண்ணுக்கும் அவளது பிள்ளைகளுக்கும் பொருத்தமானதொரு ஆயுதத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். இவ்வாயுதத்தை முழுமையுறச் செய்வதற்குப் பல நூற்றாண்டுகள் எடுத்தன. ஆனால் இவ்வாயுதத்தின் ஆக்கம் முழுமை பெற்றதும் இதனால் துர்நோக்குடைய அரக்கப்பாம்பைக் கொன்றொழிக்கக் கூடியதாயிருக்கும் ஏனெனில் இது தன்னகத்தே பசாசுகளைத் தோற்கடிக்கும் வல்லமையை கொண்டிருக்கும் அது தான் இறை- மனிதனின் மீட்பளிக்கும் மறையுண்மைகள்.

❖ அரக்கப்பாம்பு இந்த ஆயுதத்தையும் இதனைத் தரித்திருப்போரையும் வெறுக்கும். அத்துடன் பல்வேறு வழிகளைக் கையாண்டு இதனை அழிக்க முயலும், குறிப்பாக இவ்வாயுதத்தின் தோற்றம் பற்றிய வரலாற்று உண்மைகளை இல்லாதொழிக்கப் பார்க்கும்.

❖ தீயோனின் மிகவும் மோசமான தாக்குதல் இந்த ஆயுதத்தின் நிறுவுநருக்கும் அவருக்கும் இவ்வாயுதத்திற்கும் இடையிலான தொடர்பின் மீதானதாகவிருக்கும்.

❖ பல நூற்றாண்டுகாலமாக இந்த ஆயுதத்திற்கும் (வாள்) புனித சாமிநாதருக்கும் இடையிலான தொடர்புகள் சம்பந்தமான மனித உள்ளங்களில் சந்தேகங்களைத் தோற்றுவிப்பதற்கும், உள்ள ஆதாரங்களை அழிப்பதற்கும் பசாசு முயலும்.

❖ சில வேளைளில் சில அறிஞர்களும் (இறையியலாளர்களும்) வரலாற்றாசிரியர்களும் புனித சாமிநாதர் இந்த ஆயுதத்தின் நிறுவுநர் என்ற பக்கியுள்ள பாரம்பரியத்தை ஏற்காவிட்டாலும் இறைவனின் தூண்டுதலால் இந்தப்பாரம்பரியம் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதும், உண்மையானதும் எனக்காண்பிக்கும் நூல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

❖ இந்த ஆயுதம் ஒரு போதும் அழிக்கப்படவே முடியாதது. இதுதான் அரசியின் செபமாலை வாள்.

❖ வாள்கள் பலவிதமாக உருவாக்கப்படலாம். அச்சில் வார்க்கப்படும் இவ்வான்மீக வாள் அழிக்கமுடியாத, தவற முடியாத இறைவார்த்தையினால் வார்க்கப்பட்டது.

❖ இந்த அச்சில் வார்க்கப்படும் முக்கிய இரு சேர்வைகள் ‘அருள் மிகப்பெற்ற மரியே’ மற்றும் ‘பரலோக மந்திரம்’ ஆகும்.

❖ இறை கைவினைஞரின் சித்தப்படி இந்த வாள் தயாரானதும் ஆண்கள், பெண்கள், சிறுவர் எல்லோருமே இதனைத்தம் கரங்களில் ஏந்திப் பகைவனுக்கெதிராகப் பயன்படுத்தலாம்.

❖ செபமாலை என்ற இந்த வாளை உருவாக்குவதற்கு இறை கைவினைஞர் பல்வேறு மூலப்பொருட்களை ஒன்று சேர்த்தார்.

❖ இம் மூலப்பொருட்களை ஒன்று சேர்ப்பதற்குப் பல நூற்றாண்டுகள் எடுத்தன. இந்த வாளை உருவாக்குவதற்கு ஏற்ற காலம் கனிந்ததும் இறை கைவினைஞர் மூலக்கூறுகளையெல்லாம் ஒன்று சேர்த்து இந்த வாளை உருவாக்கினார்.

❖ தமது மகனின் மீட்பளிக்கும் மறைபொருட்களை இந்த வாளுக்குள் கொண்டு வந்து இந்த ஆயுதத்தை விண்ணக அரசியிடம் பொறுப்புக் கொடுத்தார். இவ்வரசி ஒரு மனிதனை தேர்ந்தெடுத்து அவரை இதன் நிறுவுநராக ஏற்படுத்தினார்.

(தொடரும்...)



# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர்
## ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**திருவிழாக்களில் யாழ்.மறைமாவட்டத்தில் பணியிலிருந்த அருட்பணியாளர்கள்,**

மே 13, அக்டோபர் 13 ஆகிய திருவிழாநாட்களில் நற்கருணைக்கு முன்பாக 53 மணித்திருச் செபமாலை செபித்த பின் ஆயரின் நள்ளிரவுத் திருப்பலியும் இடம்பெறும். பல அருட்பணி யாளர்கள் பாவ அறிக்கை வழங்குவார்கள். இப்பக்தியைப் பரப்ப இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தின் தலைவியாக இருந்த ஐரோப்பிய அருட்சகோதரி சலோமை றெய்னாட் இன் மேற்பார்வையில் சுதேச அருட்சகோதரிகளின் உதவியுடன் இங்கு இயங்கிய அலுவலகத்திலிருந்து பல வரலாற்று நூல்களும், செபங்களும், துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. இளவாலை மட விடுதிச்சாலை, யசிந்தா பாடசாலை மற்றும் இளவாலை கன்னியர் மட பாட-சாலை மாணவிகளால் காட்சிகள் தொடர்பான நாடகங்களும், கலைநிகழ்வுகளும் திருவிழாக்காலங்களில் இடம்பெற்றன.

1949-1953வரை பண்டத்தரிப்புப் பங்கில் இவர் பணியாற்றிய போது திருத்தல வளர்ச்சிக்குக் கடுமையாக உழைத்தார். 1953 இல் இளவாலைப் பிரிவின் முதல்வராகக் கடமையாற்றியபோது மடுத்திருப்பதியின் ஆழமான வளர்ச்சி காரணமாக இத்தலத்தின் முன்னேற்றம் பின்தங்கியதோடு ஆயருடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகச் சிறிது காலம் நல்லூர் மற்றும் ஏழாலையில் பணிசெய்த பின் 1969இல் பிரான்ஸ் நாட்டிற்குத் திரும்பி அங்கு வாழ்ந்த புலம்பெயர் தமிழருக்கு அளப்பரிய சேவைகள் ஆற்றி 1987 டிசம்பர் 06 இல் அங்கு இறந்தார்.

துறவற சபைகளின் முன்னேற்றம் திருக்குடும்பக் கன்னியர் பெண்பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறையுடன் செயற்பட்ட சுதேச திருக்குடும்பக் கன்னியர்களின் கல்வி, நிர்வாக, ஆன்மீக உருவாக்கத்தில் இவர் மிகுந்த அக்கறை காட்டினார்.

ஆயராக வரமுன்பு 13 வருடங்கள் தனியார் பாடசாலைமுகாமையாளராகவும் அருட்பணி முதல்வராகவும், பின்புஆயராக பாடசாலைகள் தேசியமயமாக்கப்படமுன்பும் பின்பும் பணிசெய்தவேளை, பங்குச் சந்திப்பின்போது மட்டுமல்லாது திடீர் வருகையுடனும், ஆசிரியர்களின், சம்பள விபரங்கள், இடமாற்றங்கள், புதிய நியமனங்கள், ஆன்மீக துறவற வாழ்வு, பாடசாலைகளின் வருடாந்த அறிக்கை, பெறுபேற்றுத் தரவுகள், பரீட்சை முன்னேற்றங்கள், இடவசதி தொடர்பான ஆலோசனைகளையும் முன்வைக்கத் தவறியதில்லை. சிறப்பாக அனுராதபுரம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, நெடுந்தீவு போன்ற தூர இடங்களில் பணியாற்றிய அருட்சகோதரிகளை மடுத்திருத்தலமூடாகக் கொழும்பு சென்று வரும் போதும், பங்குச் சந்திப்பின் போதும் தரிசித்துக் குறைநிறைகளைக் கேட்டறிந்து ஆலோசனை வழங்குவதிலும் அக்கறையாக இருந்தார். இப்பயணங்கள் அம்மடங்களிடையே தொடர்புகளை ஏற்படுத்தவும் உதவியது. மேலும் புகையிரத சேவை மூலமே பெரும்பாலும் அருட்சகோதரிகள், நிலையங்களில் காத்திருந்து கடிதங்களைப் பயணம் செய்து கொண்டிருக்கும் அருட்சகோதரிகள் மூலம் அனுப்பித் தொடர்புகளை ஏற்படுத் துவர். இந்நிலையில் இவரது கொழும்பிற்கான பயணங்களும் அருட்சகோதரிகளைப் பொறுத்தவரையில் இன்றியமையாதனவாயின. ஆயர் மறைமாவட்டத்திற்கு வெளியே செல்லாத டிசம்பர் மாதத்திலேயே யாழ்ப்பாணம் தலைமை மடத்தில் இடம்பெறும் அருட்சகோதரிகளின் ஆண்டிறுதித் தியானத்தில் இவர் அநேகமாகப் பங்கு கொண்டு டிசம்பர் 10ம் திகதி தொடங்கம் நடைபெறும். இறுதி நாளில் திருப்பலி நிறைவேற்றி தலைவியின் வேலைத்திட்டமிடலுக்கு ஆலோசனை வழங்குவார். இவர் மறை மாவட்டத்தைப் பொறுப்பேற்றபோது யாழ்ப்பாணத் தலைமை இல்லம் உட்பட இருபத்திரண்டு கிராமங்களில் தி.கு.க. மடங்கள் இருந்தன. 1953-1958 வரையும் றேய்மன்ட் றொப்டர் இப் பணிப்பொறுப்பை ஏற்றார். 1958இல் கொழும் பு, யாழ்ப்பாணம் என்று இரண்டு மாகாணங்களாக

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

நிர்வாகப் பிரிவுகள் ஏற்பட்ட போது 1958இல் 25 மடங்கள் இருந்தன. 1970வரை ஐரோப்பிய சகோதரி விசிற்றேசன் வடமாகாணத்தலைவியாக இருந்தார். 1970 முதல் 1976 வரை இயூலாலி முதல் சுதேச வடமாகாணத்தலைவியாக பணியாற்றினார். 1954இல் உருத்திரபுரத்தில் மடம் திறக்கப்பட்டது. 1958இல் தியானத்தின் பின்னைய தீர்மானத்தின்படி 1960இல் ஆயரின் பொறுப்பில் நானாட்டான், பறப்பாங் கண்டலில் மடங்கள் திறக்கப்பட்டன.

1963இல் தியானத்தின் பின்னைய(இளவாலை) தீர்மானத்தின் படி 1964இல் பண்டிவிரிச்சானில் மடம் திறக்கப்பட்டது. இவற்றின் காரணமாக இவ்விடங்களில் பெண்களின் கல்வி முன்னேற்றமடைந்தது. *(தொடரும்...)*

---

# தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

*– அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்*

**24**

(சென்றவாரத் தொடர்ச்சி..)



**9.5 : சமூக அநீதிகளுக்கு எதிராகச் சிறு பான்மையான தமிழ்க் கிறிஸ்தவர்கள் எதுவித போராட்டமுமின்றி, சமாளிக்கும் நிலையையே பின்பற்றினால் தமிழ் விடுதலை இறையியல் தோன்றாது.**

நிலைமையை நன்கு உணர்ந்தவராக, 1991 இல் இந்திய ஆயர் சங்கத்தைப் பார்த்து, அன்றைய பாப்பரசரின் பிரதிநிதி யோர்ஜ் சூர் மிகத் துணிவுடன் கூறினார் 60 வீதத்திற்கு மேற்பட்ட இந்தியக் கிறிஸ்தவர்கள், மிகத் தாழ்த்தபட்ட சாதியை சேர்ந்தவராயிருந்தும், அவர்களுக்குத் தீர்மானிக்கும் சக்தியில்லை. சாதியில் உயர்ந்த இந்துக்கள் மாத்திரமல்ல, உயர்ந்த சாதிக் கிறிஸ்தவர்களும் அவர்களின் மனித உரிமைகளை மறுக்கின்றனர்.

இப்படியாக இந்தியக் கிறிஸ்தவத்தின் சிக்கலான நிலைமையில், இந்தியாவின் பிராமண - இந்துக்களின் பெரும்பான்மை அதிகாரத்தின் கீழ், தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் ஓர் சமாளிக்கும் கிறிஸ்தவத்தையே தொடரச் செய்கின்றது. இந்திய அரசு இவ்வேற்றுமைகளைக் குறைக்க முடியாத நிலைமையில், அந்நாட்டின் யாப்பிலே சாதியற் றோருக்கு, சில துறைகளில் சலுகையாக சில வசதிகள் செய்திருக்கிறது. ஆனால் இலங்கையில் தாழ்த்தப்பட்ட தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு அப்படியான சலுகை ஏதும் இல்லை!

இந்தியாவில் பக்தி இயக்கங்களும், அம்பெட்காரின், பெரியாரின் சுய மரியாதை இயக்கங்கமும் (Ambedkar, Periyar movements) எதிர்ப்பையும் மாற்றத்தையும் ஓரளவிற்கு ஏற்படுத்துகின்றன. ஆனால் இந்திய மக்களின் சிந்தனை, பார்வை, கலை, கலாசாரம், எல்லாம் பிராமண - இந்து சக்தியின் பிரமாண்ட தன்மையை எதிர்த்து, முன்னேறுவது மிகக் கடினம். கிறிஸ்தவர்களின் முயற்சியும் இவைகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் தான் தமிழ்க் கிறிஸ்தவத்தின் முயற்சிகளை நாம் மதிப்பீடு செய்ய வேண்டும். ஒரு பக்கத்தில் தமிழர்கள் இந்தியர்களாக, பிராமண - சைவ உலகத்தில் வேரூன்றி இருக்கின்றனர். மறுபக்கத்தில் அவர்கள் ஏற்றுக் கொண்ட கிறிஸ்தவத்தின் அமைப்புக்களாக, **(institutionalised churches)** சமூக அரசியல் பிரச்சினைகளிலிருந்து விலகி நிற்கும் போக்கை ஊக்குவிக்கின்றன. இதனுள் தான் தமிழ்க் கிறிஸ்தவர்களின் வருங்கால சவால் அடங்கியிருக்கிறது.

எப்படி ஒரேநேரத்தில் தமிழுக்கும் கிறிஸ்தவத்திற்கும் பிரமாணிக்கமாக நடப்பது? இரண்டும் இறைவன் கொடுத்த அழைத்தல்கள். தமிழின ஊற்று வேர்கள் பிராமண - இந்து ஆதிக்கத்தில் ஊன்றியிருக்கின்றன. அதிலே ஊறியிருக்கும் சாதி வேற்றுமைகள் அடிமைத்தனங்களிலிருந்து முழுமையாகப் பிரிவது கடினம். தமிழரின் பார்வைகள், சிந்தனை முறைகள், நடை உடை பாவனை தொடர்ந்தும் தமிழராகவே இருக்கின்றன. கிறிஸ்தவத்தின் சாராம்சத்தை எவ்வளவிற்குத் தமிழ்க் கிறிஸ்தவர்கள், தமிழராக இருந்து கொண்டு உள்வாங்கலாம் எனறும் தமிழ்க் கிறிஸ்தவத்தில் ஓர் விடுதலை இறையியல் உருவெடுப்பது மிகவும் கடினம்.

**ஆசியாவையும் எம்மையும் பொறுத்த மட்டில், இந்நிலைமை தான் தமிழ் விடுதலை இறையியல் தோன்றுவதற்குத் தடையாக இருக்கின்றது. ஏன்?**

ஆதியில் யூத கிறிஸ்தவ குழுமங்கள் இயேசுவின் அப்போஸ்தலரினால் வழிநடத்தப்பட்டபோது (jewish christianity) யூதரின் ஒடுக்கமான பரிசேய, விருத்தசேதன விதி முறைகளிலிருந்து விடுபட்டு, புறஇனத்தாரையும், மனித மானத்தையும் மதித்து, தம்மிடம் உள்ள இறைவனின் நற்செய்தியையும் இருப்பையும் பகிர்ந்து கொள்ளும் திருஅவையாக அயல் நாடுகளில் பரவியது. (universalisation of Christianity as sharing of Good News and all they had)

*(தொடரும்...)*

---

# ‘திருமறை முத்துக்கள்’

அருட்பணி. தே. யூட்தாஸ்

**260.திரு அவையின் கட்டளைகள் எவை?**

1. ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும், திருப்பலியில் முழுமையாய்ப் பங்கேற்க வேண்டும். இந்நாட்களில் புனிதத்தைப் பாதிக்கக் கூடிய செயற் பாடுகளைத் தவிர்க்க வேண்டும்.
2. ஆண்டிற்கு ஒரு முறையாவது. தகுந்த தயாரிப்புடன் ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கேற்கவேண்டும்.
3. பாஸ்காக் காலத்தில் ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கேற்று, நற்கருணை உட்கொள்ள வேண்டும்.
4. திரு அவை குறிப்பிட்டுள்ள நாட்களில் இறைச்சி உண்ணாதிருக்க வேண்டும். நோன்பு நாட்களில் ஒருவேளை மட்டும் முழு உணவு உண்ணலாம்.
5. குறைந்த வயதிலும், திருமணத்தடை உள்ள உறவினரோடும், திருமணம் செய்யாதிருக்க வேண்டும்.
6. திரு அவையின் தேவைகளை நிறைவேற்ற நம்மால முடிந்த உதவி செய்ய வேண்டும்.

**261. முதலாவது திரு அவையின் கட்டளை என்ன?**

ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும், திருப்பலியில் முழுமையாய்ப் பங்கேற்க வேண்டும். இந்நாள்களில் புனிதத்தைப் பாதிக்கக் கூடிய செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும்.

**262.இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் கடன்திருநாட்கள் எவை?**

இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் கடன் திருநாட்களாவன:

- வருடத்தில் வரும் அனைத்து ஞாயிறு தினங்கள்.
- ஜனவரி 1 - அன்னை மரியா இறைவனின் தாய்,
- ஆவணி 15 - அன்னை மரியா விண்ணுலகிற்கு எடுத்துக்கொள்ளப்படல்,
- டிசம்பர் 8 - அன்னை மரியாவின் அமல உற்பவம்,
- டிசம்பர் 25 - கிறிஸ்துவின் பிறப்பு

**263. ஞாயிறு தினங்களிலும் கடன் திருநாட்களிலும் கத்தோலிக்கர்கள் முழுப்பூசை காணக் கடமைப்பட்டுள் ளோமா?**

கத்தோலிக்கர்கள் அனைவரும் ஞாயிறு தினத்திலும் கடன்திருநாட்களிலும் முழுப்பூசை காண காத்திரமாகக் கடமைப்பட்டுள்ளனர். மிக அவசரமான கடமைகள், உடல்நலக் குறைபாடு காரணமாகப் பங்குபற்ற இயலாமை விதிவிலக்கு ஆகும்.

**264.பெற்றோர், துறவறமடங்களின் தலைவர்கள், தலைவிகள் தமது பொறுப்பிலுள்ளோர் ஞாயிறு தினங்களிலும் கடன் திருநாட்களிலும் திருப் பலியில் பங்கு பெற ஆவன செய்யவேண்டுமா?**

ஆம், பெற்றோர், துறவறமடங்களின் தலைவர்கள், தலைவிகள் தமது பொறுப்பிலுள்ளோர் ஞாயிறு தினங்களிலும் கடன்திருநாட்களிலும் திருப்பலியில் பங்குபெற ஆவன செய்யவேண்டும்.




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(மல்லிகா, முல்லைத்தீவு)*

**கே: 'அன்புள்ள ஆரியசிங்க' என்ற நூலை இரண்டாவது தடவை கொழும்பில் அறிமுகம் செய்து வெளியிட்டு வைத்த நிகழ்வு எத்தகைய வரவேற்பைப் பெற்றது?**

**ப:** மல்லிகா, கண் விழித்திரையில் படரும் ஒரு சவ்வை சத்திர சிகிச்சையால் ('கற்றாக்ற் சேஜறி') நீக்கிவிட கண் பார்வை மீண்டும் எப்படித் திரும்பு கின்றதோ அதுபோன்ற ஓர் அனு பவம்தான் கொழும்பில் இந்நூலை அறிமுகம் செய்த தன் ஊடாகக் கிடைத்த பயன்களுள் ஒன்று. இந்நாட்டில் தமிழ்மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைக் கொஞ்சம் ஆழமாகப் புரிந்துகொள்ள விளைந்திருக் கின்றார்கள் என்றே நினைக்கின் றேன். நம்முடைய பிரதேசங்களில் நடந்த அக்கிரமங்கள் பலருக்குத் தெரியாதது போலவே தெரிகின்றது. அதுபோல, தெரிந்துகொள்ள அவர்கள் முயற்சிக்க வில்லை என்பதோடு அரசு கூறிவந்த பொய்களை உண்மைகளாகக் கொண்ட தால் நமது துன்பதுயரங்களை யும் அவலங்களையும் அவர்கள் அறிய வழியில்லாமல் போனது போல் தெரிகிறது. உண்மையில், இவ்வாறான முயற்சிகள், நமது அரசியல் அபிலாசைகள் பற்றிய அவர்களின் புரிதலை விரிவாக்கும் என நம்புகின்றேன்.

*(விதுஷன், யாழ்ப்பாணம்)*

**கே: இலங்கையை வறுமையான நாடுகளின் பட்டியலில் சேர்த்துவிட்டார்களே, ஏன்?**

**ப:** தம்பி விதுஷன், நீங்கள் எங்கு இருக் கின்றீர்கள்! இலங்கையை வறுமையான நாடுகளின் பட்டியலில் சேர்க்காமல் பணக்கார நாடுகளில் பட்டியலிலா சேர்க்கச் சொல்லுகின் றீர்கள் உண்மையில், இந்நாடு இன்றிருக் கும் நிலையில், 'பிச்சை எடுக்கும் நாடுகளின் பட்டியல்' என்ற ஒரு புதிய வகைப்படுத்தலை உருவாக்கி அதற்குள் இந்நாட்டைச் சேர்த் திருக்கவேண்டும்!

*(செல்வி, கொழும்பு)*

**கே: சில பதவிகளில் இருக்கும் அதிகாரிகள் அப்பதவிகளில் இருந்து செய்யவேண்டிய வேலைகளைச் செய்கின்றார்கள் இல்லையே! இதனால் கிடைக்கவேண்டிய, நடைமுறைப் படுத்த வேண்டிய பல நன்மையான திட்டங் கள் இல்லாமல் போகின்றனவே!?**

**ப:** செல்வி, மிகவும் வேதனையான விடயம் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஆற்ற லில்லாத – தகுதியில்லாத ஒருவருக்குக்கிடைக் கும் பதவி நாயிடம் கிடைத்த தேங்காய் போன் றதுதான்! அதனை, அதற்கு உருட்டத் தெரியுமே தவிர, உருப்படியாக ஒன்றையும் செய்யத் தெரி யாது! என்ன செய்வது? நம்முடைய அலு வலகங்களிலும் இப்பேர்ப்பட்ட சிலரையாவது காணலாம்! இப்பேர்ப்பட்டவர்களால் நடைபெற வேண்டிய பல நல்ல திட்டங்கள் நடந் தேறா- மலே போய்விடுகின்றன! பாவம் நம்மக்கள்!

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கே: யாரைப் பார்த்தாலும் 'கடன் கடன்' என்று தான் சொல்லுகின்றார்கள் அல்லது 'கடன் கடன்' என்றுதான் கேட்கின்றார்கள்! கடன் கடன் என்று அல்லற்படுகின்றவர்களுக்கும் கடன் கேட்கின்றவர்களுக்கும் நல்ல புத்திமதி ஒன்றைத் தாருங்களேன்?**

**ப:** அருள், நம் நாட்டின் நிலவும் பொருளா- தார நெருக்கடியால் வருமானம் குறைவாய் இருப்பது, கிடைக்கின்ற வருமானம் போதாதது, பொருட்களை அதிக விலைகொடுத்து வாங்கு வது, கையில் பணம் இல்லாதது எனப் பல காரணங்களால் கடன் வாங்கும் நிலைக்கும் நிலைமைக்கும் பலர் தள்ளப்படுகின்றார்கள். இதனால் கடனையோ அல்லது கடன்க ளையோ பட்டுப் பலரும் படாதபாடு படுகின் றார்கள். மேலும், சிலர் கடனைக் கொடுப்பதற் குக் கடன்பட்டுத் துன்புறுகின்றார்கள்! இருப்ப தோடும், உழைப்பதோடும் வாழ்க்கையைக் கொண்டு செல்லக்கூடிய நிலைகளை உரு வாக்குவதும், கிடைக்கும்போது சிறு சிறு சேமிப் பைச் செய்வதன் ஊடாகவும் இன்றைய சூழ லில் தப்பிப்பிழைப்பதற்கான வழிகளை உரு வாக்கலாம். இல்லையென்றால், கடன் என்ற பெரும் சுமையால் வாழ்க்கையையே இழக்க நேரிடும். நிற்க, 'கடன் உறவுக்குப் பகை' என்று கடைகளில் எழுதி ஒட்டியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அக் கூற்றில் நிறைய உண்மை இருக்கின்றது. கடன் கொடுத்து, பணத்தையும் இழந்து உறவையும் இழந்த வர்கள் பலர். 'கடனோடு காலையில் எழுவதை விட, பட்டினியோடு இரவில் படுப்பது மேல்!' என்ற பெரியாரின் கூற்று இத்துன்பத்தில் இருந்து மீளத் துணைசெய்யட்டும்.

*(கருணா, யாழ்ப்பாணம்)*

**கே: தண்ணீரை, பாலை, வேறு பானங்களை, மதுவைக் குடிக்கின்றோம். ஆனால், இவற்றில் மதுவைத் தவிர எதனையும் 'குடி' என்று அழைப்பதில்லை! ஏன் அப்படி?**

**ப:** கண்ணா கருணா, அது ஒன்றுதான் உயி ரைக் குடிக்கின்றது என்பதால்தான் அப்படி அழைக்கப்படுகின்றது, இதனைச் சொன்ன வர் கவியரசு. இவ்வுண்மையை உறு திப்படுத்துவதுபோல ஓர் ஓவியத்தைச் சில ஆண்டுகளுக்கு முன் பார்க்கச் சந் தர்ப்பம் கிடைத்தது. அதில், ஒரு படத்தில் ஒரு மதுப்போத்தலுடன் ஒருவர் இருக் கின்றார். அதாவது, மனிதன் மதுவைக் குடிக்கின்றான் என்று பொருள். இரண் டாவது படத்தில், மதுப்போத்தல் இல்லை, ஆனால் மனிதன் மட்டும் இருக்கின் றான். இதன் அர்த்தம், மனிதன் போத்த லில் உள்ள மதுவைக் குடித்துவிட்டான். மூன்றாவது படத்தில், மனிதனைக் காணவில்லை, ஆனால் போத்தல் மட் டும் இருக்கின்றது. அதன் பொருள், மது மனிதனைக் குடித்துவிட்டது. கண்ணா கருணா, ஏன் மதுவைக் 'குடி' என்கின்றோம் என்று இப்போது புரிகின்றதா? ஆகவே, 'குடி' உங்களைக் 'குடிக்காமல்' பார்த்துக்கொள்ளுங்கள்!

## நவாலிப் பக்கில்

*(2ம் பக். தொடர்ச்சி)*

இத் திருச்சொரூப வழிபாடு இல்லங்கள் தோறும் நடைபெற்றதோடு, பத்திற்கும் மேற்பட்ட பிற மத சகோதரர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களின் இல்லங்களிலும், தொழில் புரியும் இடங் களிலும் அன்னையின் பரிந்துரையும் ஆசீர்வாதமும் கிடைக்கக் கொண்டு செல்லப்பட்டது சிறப்பம்சமாகும்.

இறுதியாக இளையோரால் செபமாலைப் பேரணி ஆலயம் வந்த டைந்து மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் அருட்பணியாளர்கள் ரவிராஜ், ஜேம்ஸ்நாதன், ஜோண் கனி சியூஸ் ஆகியோரால் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, குருமுதல்வரால் அன்னையின் திருச்சொரூப ஆசீர் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வை கடந்த ஏழு மாதங்களாக பக்திபூர்வமாக நடாத்தி முடித்த பங்குமகன் திருவாளர் பொனிப் பாஸ் இம்மானுவேல் (மரியகுமார்) என்பவரைப் பாராட்டி குருமுதல்வரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டது.


விண்ணக வாழ்வின்
2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 . 10 . 1951

உதிர்வு 03 . 06 . 2021



அமரர் ஜோசப் விக்ரர் ஜெயராஜா
(Rose Arts)

மனங்களில் நிதம் வாழும்
மன்னன் எங்கள் அப்பா
எமை விட்டு எங்கு சென்றீர்
எப்படி நாம் கேட்போம்?

உயிருள்ள எம்முடன் உயிர் மூச்சாகி
உயிர்ப்பற்ற எம் உடைமைகளில்
உண்மையின் உருவமாகி
உறைகின்ற அன்புருவே!

கலங்கரை விளக்கொன்று
கானல் நீராய்ப் போய்

ஈராண்டு ஆனதுவே
பிரிவின் வலி நீள்கின்றது
உம் கரங்களுக்குள் எம்மை வைத்து
வழிகாட்டி உயர்வு தந்தீர்கள் - அப்பா!

உங்கள் கள்ளமற்ற அன்பையும்
உதட்டோரம் உதிர்க்கும் - உங்கள்
புன்னகையையும் காணாது
வாடி நிற்கின்றோம் -
உங்கள் ஆன்மா
இறைவன் அடியில் இறைப்பாற
இறைஞ்சிடுவோம் நிதம்...

*இல. 05, ஒடக்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*இவரின் பிரிவால் துயருறும்*
*மனைவி, பிள்ளைகள்*

AD-33



விண்ணக வாழ்வின்
5ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 . 03 . 1935

உதிர்வு 04 . 06 . 2018



அமரர் . திரு. பொன்ராசா
அன்ரன் கிளாறன்ஸ் ஆனந்தராஜா
(ஓய்வு பெற்ற ஆசிரியர் – கென்றியரசர் கல்லூரி இளவாலை)

நிகழ்வுகள் அனைத்தும் நினைவுகள் ஆகி
நிரந்தரமாயிற்று, சிரித்த முகம் எம்மை விட்டுப் பிரிந்து.
உம் பாசம் ஒன்றே எம்மை விட்டுப் பிரியாது
எம் வாழ்நாளெல்லாம்.
ஆண்டவரே நீரே என் புகலிடம் என உம்மிடம் சரண் அடைந்த
அடியான் அன்ரன் கிளாறன்ஸ் ஆனந்தராஜாவுக்கு
இரக்கம் காட்டி அரவணைத்து நித்திய
பேரின்ப வீட்டில் இடம் அளித்தருள வேண்டுகின்றோம்

*'மனோசாந்தி'*
*407, கொறவப்பொத்தானை வீதி,*
*இறம்பைக்குளம்,*
*வவுனியா*

*பிரிவால் துயருறும்*
*அன்பு மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

AD-35


## 75வது அகவை காணும் மன்னார் ஆயரை வாழ்த்தி மகிழ்ந்த யாழ். மறைமாவட்டக் குருக்கள்



மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தனது 75வது அகவைக்குள் 20ஆம் திகதி காலடி எடுத்து வைத்துள்ளார். 75வது அகவை காணும் மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களை யாழ். மறைமாவட்டக் குருக்கள் வாழ்த்தி மகிழ்ந்தனர்.

75ஆவது அகவையில் மன்னார் ஆயரின் பணி சிறக்க பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக செபங்களுடன் கூடிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத் திருவிழா



புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை எட்வின் நரேஸ் அடிகளின் வழிநடத்தலில் நடைபெற்ற இத்திருவிழாவில் திருநாள் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார்.

கடந்த 11ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்றுவந்துள்ளதுடன் 19ஆம் திகதி நற்கருணை விழாவும் நடைபெற்றது. நற்கருணை விழா திருப்பலியை அருட்தந்தை யேசுரட்ணம் அடிகள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

## தீவகத்தில் க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான சிறப்புக் கருத்தமர்வு



தீவக மறைக்கோட்ட மறையாசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான சிறப்புக் கருத்தமர்வு கடந்த 14ஆம் திகதி அல்லைப்பிட்டி மொன்போர்ட் சர்வதேசப் பாடசாலையில் இடம்பெற்றது.

தீவக மறைக்கோட்ட மறையாசிரியர்களின் இணைப்பாளர் அருட்தந்தை ஜெகன்குமார் அடிகளின் வழிகாட்டலில் இடம்பெற்ற இச்சிறப்புக் கருத்தமர்வை யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி மேரி வினிபிறீடா சுரேந்திரராஜ் தலைமை தாங்கி நடாத்தினார்.

## வன்னி கியூடெக்கில் மதங்களுக்கிடையிலான நல்லிணக்க நிகழ்வு



மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் வன்னி கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் சிங்கள புத்தாண்டு சிறப்பு நிகழ்வு கடந்த 12ஆம் திகதி பரந்தன் சிவபுரம் பிரதேசத்தில் நடைபெற்றது.

வன்னி கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஜீவன் அடிகளின் தலைமையில் பரந்தன், சிவபுரம் பகுதியைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைத்து நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை சகாயநாயகம் அவர்களும் மகேஸ்வர குருக்கள் அவர்களும் கிராம உத்தியோகத்தர், மாயவனூர் சமூக மட்ட அமைப்பினர் மற்றும் உருத்திரபுரம், கல்மடுநகர் இளையோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## சவேரியார் குருமடத்தில் புதிய குருக்களின் நன்றித்திருப்பலி



யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் குருத்துவ உருவாக்கத்தை நிறைவுசெய்து, கடந்த நான்கு வருடகாலத்தில் திருநிலைப்படுத்தப்பட்ட அருட்தந்தையர்கள் ஒன்றிணைந்து குருத்துவக் கல்லூரியில் கடந்த 19ஆம் திகதி நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

கல்லூரி அதிபர் அருட்தந்தை கிருபாகரன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வு கொவிட் பெருந்தொற்றுப் போன்ற காரணிகளால் பல வருடங்களின் பின் இடம்பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இயங்கிவரும் அன்னை திரேசா சமூக சேவைக்குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாமும் அன்றைய தினம் நடைபெற்றுள்ளது.

குருமட கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இவ் இரத்ததான முகாமில் குருமட மாணவர்கள் குருக்களென 27 வரையான குருதிக்கொடையாளர்கள் கலந்து குருதிக்கொடை வழங்கியிருந்தார்கள்.

## குமுதினிப் படுகொலையின் நினைவுநாள் அனுஷ்டிப்பு




குமுதினிப் படுகொலையின் 38 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு உணர்வுபூர்வமான முறையில் நெடுந்தீவு இறங்குதுறைப் பிரதேசத்தில் கடந்த 15ஆம் திகதி அனுஸ்டிக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் நோக்கி 64 பயணிகளுடன் பயணித்த குமுதினிப் படகை இலங்கைக் கடற்படையினர் நடுக்கடலில் வழிமறித்து குழந்தைகள் பெண்கள் முதியவர்கள் என 36 பேரை வெட்டி படுகொலை செய்ததை நினைவுகூர்ந்து இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நெடுந்தீவு இறங்குதுறைப் பிரதேசத்திலுள்ள புனித சவேரியார் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்தந்தை விமலசேகரன் அடிகளின் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுத் தொடர்ந்து நெடுந்தீவு இறங்குதுறையிலுள்ள நினைவாலய வளாகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. நினைவேந்தல் குழுமத்தின் நெடுந்தீவு பிரதேச தலைவர் ருத்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## மானி. புனித அன்னாள் ஆலயத்திருவிழாவை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகள்





மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு பங்குமக்களால் பல சிறப்பு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பங்குத்தந்தை அருட்தந்தை றெக்ஸ் சவுந்திரா அடிகளின் வழிகாட்டலில் பங்குமக்கள் இணைந்து அவர்களுக்கிடையிலான தோழமையொன்றை வளர்த்தெடுக்கும் நோக்கோடு இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் ஒன்றான சிறுவர்கள், பெரியோர்கள் இருபாலருக்குமான மரதன் ஓட்ட நிகழ்வு கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது. இப்போட்டியில் ஏராளமானோர் மிக ஆர்வத்துடன் பங்குபற்றினர். தொடர்ந்து மாலை ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியும் நடைபெற்றது.

## பத்திரிசியார் கல்லூரியில் பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் நினைவுகூரப்பட்டார்



முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் மரணமடைந்தவர்களையும் அதே தினத்தில் இலங்கை அரச படையினரால் காணாமல் ஆக்கப்பட்ட கல்லூரியின் முந்நாள் அதிபர் அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் அடிகளையும் நினைவுகூர்ந்து முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல் நிகழ்வு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன் அடிகளின் வழிநடத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அடிகளாரின் உருவப் படத்திற்கு மரியாதை செலுத்தி அரைக் கம்பத்திலே கல்லூரிக் கொடி பறக்கவிடப்பட்டு நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

## புங்குடுதீவில் இரத்ததான முகாம்



புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய இளையோர் மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாம் கடந்த 15ஆம் திகதி புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் இடம்பெற்றது.

ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு பங்குத்தந்தை அருட்தந்தை எட்வின் நரேஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் 35 வரையான குருதிக் கொடையாளர்கள் கலந்து இரத்ததானம் வழங்கியிருந்தார்கள்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.